






முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், 1400 வனக் காவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, , குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியதற்காக திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதாப் அவர்களுக்கு பசுமை விருது வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத், முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம். ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நீர் நிலைப்பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்ட 38 நபர்களுக்கு முதலமைச்சரின் நீர்நிலைப் பாதுகாவலர் விருதுகள் மற்றும் தலா 1 இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகையையும் வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம். ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நாட்டுப்பற்றிலும் – மொழிப் பற்றிலும்

# எஃகு போன்ற உறுதி காட்டியவர், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜுன் 7-

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 130வது பிறந்தநாளை யொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**எவரும் குறைகாண முடியாத அப்பழுக்கற்ற வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் இஸ்லாமிய சமூகத்தின் இணையற்ற தலைவர், தந்தை பெரியாரால் அரிய தலைவர் எனப் போற்றப்பட்டவர், தலைவர் கலைஞரின் மீது அன்பைப் பொழிந்தவர் 1967இல் கழகம் ஆட்சியமைக்கத் துணைநின்றவர், நாட்டுப்பற்றிலும் மொழிப்பற்றிலும் எஃகு போன்ற உறுதியைக் காட்டிய கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் பிறந்தநாள்!**

**காயிதே மில்லத் அவர்கள் பிறந்த திருநெல்வேலி மாவட்டத்தில் அமையவுள்ள மாபெரும் நூலகத்துக்கு அவரின் பெயர் சூட்டப்படும் என அறிவித்த மனநிறைவோடு அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தினேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அரசு உறைவிடப் பள்ளி மாணவி

# ராஜேஷ்வரியின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்!

## மாணவியின் சாதனையைப் பாராட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜுன் 7-

அரசு உறைவிடப் பள்ளியில் படித்து ஐ.ஐ.டி. சேருவதற்கான சாதனை படைத்த மாணவியின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அரசு உறைவிடப் பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் சாதனை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**தந்தையை இழந்தாலும், அவர் கனவைத் தன் நெஞ்சில் சுமந்து நனவாக்கியிருக்கும் அரசு உறைவிடப் பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் சாதனைக்கு என் Salute!**

**அவரது உயர்கல்விச் செலவு மொத்தத்தையும் அரசே ஏற்கும் என மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.**

**ராஜேஷ்வரி போன்ற நமது மகள்கள் மேலும் பலர் சேருவதுதான் IITக்கு உண்மையான பெருமையாக அமையும்! அதற்காக நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து உழைக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளையொட்டி- கண் சிகிச்சை நிபுணர் மருத்துவர் சுரேந்தர்

# சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் இருவருக்கு இலவச கண் சிகிச்சை!

சென்னை, ஜுன் 7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 -வது பிறந்த தினத்தை முன்னிட்டு 3.6.2025 அன்று சங்கர நேத்ராலயா மருத்துவர் சுரேந்தர் ஏழை எளியோர் இருவருக்கு இலவச கண் சிகிச்சைசெய்துள்ளார்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜுன் 3 ஆம் தேதி அன்று ஒவ்வொரு ஆண்டும் ஏழை எளியோர் இருவருக்கு சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் கண் மருத்துவர் சுரேந்தர் இலவச கண் சிகிச்சை செய்து வருகிறார்.

அதேபோன்று இந்த ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த தினத்தை முன்னிட்டு 3.6.2025 அன்று நுங்கம்பாக்கம் சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் பிரபல கண் மருத்துவர் சுரேந்தர் இரண்டு எழை எளியோருக்கு இலவசமாக கண் சிகிச்சை செய்துள்ளார்.

கண் சிகிச்சை மேற்கொண்ட இருவரும் மருத்துவர் சுரேந்தருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.





நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் 04.06.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எடமலைப்பட்டிபுதூர் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய மாநகராட்சி மாதிரி உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், அருண் நேரு எம்.பி., மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கிருஷ்ணபிரியா, நகரப் பொறியாளர் சிவபாதம், வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் தி.முத்து செல்வம், மண்டலத்தலைவர்கள் மதிவாணன், திருமதி.துர்காதேவி, திருமதி.எஸ் விஜயலட்சுமி கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள், நகரப் பொறியாளர் சிவபாதம், காஜாமலை, விஜய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஜுன். 11-12 தேதிகளில்

# சேலத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு - இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சேலம், ஜுன் 7-

முதலமைச்சர் சேலம் வருகையையொட்டி, விழா நடைபெறும் சேலம் மாவட்டம், இரும்பாலை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (05.06.2025) ஆய்வு மேற்கொண்டார்கள்.

முதலமைச்சர் வருகின்ற 11.06.2025, 12.06.2025 ஆகிய 2 நாள்கள் சேலம் மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார்கள். குறிப்பாக, 11.06.2025, புதன்கிழமை அன்று வருகை புரிந்து மேட்டூர் செல்ல உள்ளார்கள். இதனைத் தொடர்ந்து, 12.06.2025 வியாழக்கிழமை அன்று காலை மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார்கள்.

பின்னர், சேலம், இரும்பாலை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் விழாவில் பங்கேற்றுச் சுமார் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்கள். இவ்விழாவில், சுமார் ரூ.1,500 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிடவுள்ளார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் விழா நடைபெறும் இடமான அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து, தொடர்புடைய துறை அலுவலர்களுடன் நேற்றைய தினம் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, விழா மேடை அமைத்தல், பயனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கான இருக்கை வசதிகள், பந்தல் அமைக்கும் பணிகள், பாதுகாப்புப் பணிகள், பயனாளிகளுக்கான அணுகு சாலை, குடிநீர், கழிப்பிடம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகையையொட்டி மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபிநபு, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் மா. இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ.தேவிமீனாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தியாகராஜன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் சுரேஷ்குமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.